நாள்: 26.02.2026
OS. 501/2021
பெயர் பெரியாண்டி
வா.சா.2

<u>குறுக்கு விசாரணை</u>

வாதி தனுஷ்கோடி அழைத்ததால் தான் நான் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன். பிரதிவாதி சொத்தின் சர்வே எண்.171/1 ஆகும். பிரதிவாதி எந்த வருடம் சொத்தை கிரையம் வாங்கினார் என்றால் 3 ஆண்டுகளுக்கு முன்னர் கிரையம் வாங்கினார். முத்துராஜா, வாதிக்கு 2 முறை ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தார். 2 கிரைய ஒப்பந்த ஆவணங்களிலும் நான் தான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். என்னுடன் முதலில் எழுதப்பட்ட கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையொப்பம் போட்ட நபர் யார் என்றால் ஞாபகம் இல்லை. வாதியிடம் பிரதிவாதி வட்டிக்காக தான் பணம் வாங்கிக்கொண்டு கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. கிரையம் வாங்க தான் கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்தார். கிரைய ஒப்பந்த சொத்து காலி இடமாகும். சொத்தின் அளவு எவ்வளவு என்றால் 2 1/4 செண்ட் இருககும், குறிப்பிட்டு சொல்லமுடியாது. என் முன்னால் 1 செண்டின் விலை 1,55,000/- என பேசினார்கள். உண்மையில் அந்த பகுதியில் கிரைய ஒப்பந்த சொத்து 1 செண்டின் விலை 7 லட்சம் வரை செல்கிறது என்றால் சரியல்ல. மொத்த சொத்தின் விலை 15 லட்சத்திற்கு மேல் மார்க்கெட் மதிப்பு உள்ளது என்றும், நான் சொத்தின் மதிப்பை குறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொத்தை பார்த்துள்ளேன். வடக்கு பார்த்த நிலம் ஆகும். சொத்தின் 4 மால் எல்கையில் யார் சொத்து உள்ளது என்று எனக்கு தெரியாது. சொத்து எந்த பக்கம் பார்த்து உள்ளது என்ற விவரமே எனக்கு தெரியவில்லை என்றால் சரிதான். சொத்தின் நீள, அகலங்கள் தெரியாது. உண்மையில் வட்டிக்காக தான் பிரதிவாதி, வாதியிடம் கடன் வாங்கி கொண்டு வழக்கு சொத்தை பொறுத்து கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், கிரையம் கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தில் கிரைய ஒப்பந்தம் பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. முதல் முறை போட்ட கிரைய ஒப்பந்தம் 3,60,000/-க்கு கிரையம் பேசி ஒப்பந்தம் பிறப்பிக்கப்பட்டது. முதல் முறை போட்ட கிரைய ஒப்பந்தம் எப்போது போட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. 2 வது முறை போட்டது 3 வருடங்களுக்கு முன்பு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. எனக்கு வழக்கை பற்றி முழு விவரம் தெரியவில்லை என்றும், அதேபோல், சொத்தை பொறுத்து முழு விவரம் தெரியவில்லை என்றும், வாதி கேட்டுக்கொண்டதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல.

(ஒம்).M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி
உத்தமபாளையம்